வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2521/ஆ5/2023, நாள். 05.07.2023

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – புதிய தலைமுறை தொலைக்காட்சி – "வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்ற நிகழ்ச்சி – மாவட்ட அளவிலான போட்டி 12.07.2023 (புதன்கிழமை) அன்று – வேலூர், ஸ்ரீபுரம், ஸ்ரீ நாராயணி மஹாலில் நடைபெற உள்ளது – ஆர்வமும் திறமையும் உள்ள மாணவர்கள் கலந்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.00743/எம்/இ2/2022, நாள். 13.06.2023
2. புதிய தலைமுறை நிறுவனக் கடிதம்.

•••••

பார்வை 1–ல் காணும் செயல்முறைகளுக்கிணங்க, புதிய தலைமுறை என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தால் "வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்ற நிகழ்ச்சியினை வழங்கி வருவதாகவும், மனிதகுலத்தின் நலனுக்காக புதுமையும் எளிமையும் இணைந்த புதுப்புது கருவிகளைக் கண்டுபிடிக்கும் புதிய விஞ்ஞானிகளையும் அவர்களது கண்டுபிடிப்புகளையும் அறிமுகப்படுத்தி கௌரவிப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கம் எனவும், இந்த நிகழ்ச்சியை முதல் கட்டமாக தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்கள் தோறும் நடத்த இருப்பதாகவும் இந்நிகழ்சியில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் அறிவியல் ஆர்வம் உள்ள மாணவர்கள் பங்கேற்க உரிய அனுமதி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி, "வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி 2023" என்ற நிகழ்ச்சியினை மாவட்ட அளவிலான போட்டி வேலூர் மாவட்டத்தில் 12.07.2023 (புதன்கிழமை) அன்று ஸ்ரீபுரம், ஸ்ரீ நாராயணி மஹாலில் நடக்கும் நிகழ்ச்சியில் வேலூர், காட்பாடி, கணியம்பாடி, அணைக்கட்டு, மற்றும் கே.வி.குப்பம், ஒன்றியங்களைச் சார்ந்த மாணவர்கள் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் போட்டியில், ஆர்வமும் திறமையும் உள்ள 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு தங்களது அறிவியல் படைப்புகளை (Working Model) செயல்படுத்திக்காட்டி, அவர்களது திறமையினை வெளிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமையாசியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு – அரசு பள்ளி மாணவர்களுக்கு மட்டும் பேருந்து வசதி உண்டு. பேருந்து நிறுத்தம் – சித்தூர் பஸ் நிறுத்தம், பழைய பேருந்து நிறுத்தம், புதிய பேருந்து நிறுத்தம்)

மதிய உணவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்பிற்கு தொலைபேசி எண். 9994499524, 8754417330)

இணைப்பு –
பார்வையில் காணும் கடிதங்கள்
மற்றும் விதிமுறைகளின் நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள். வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்
   (மெட்ரிக் பள்ளிகளுக்கு இப்பொருள் சார்பாக தெரிவிக்கும் பொருட்டு)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (வட்டாரக் கல்வி அலுவலர் மூலமாக நடுநிலைப் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு)
   (இணைப்பு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக தங்கள் அலுவலக மின்னஞ்சல முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.)
4. இயக்குநர், புதிய தலைமுறை தொலைக்காட்சி நிறுவனம், சென்னை–32.